சென்னை போதைப்பொருள் மற்றும் மனநிலை பாதிக்கும் பொருட்களுக்கான முதன்மை சிறப்பு நீதிமன்றம்

சென்னை போதைப்பொருள் மற்றும் மனநிலை பாதிக்கும் பொருட்களுக்கான முதன்மை சிறப்பு நீதிமன்ற அலகில் உள்ள பல்வேறு காலி பணியிடங்களை நிரப்பும் பொருட்டு தகுந்த நபர்களை தேர்ந்தெடுப்பதற்கான விளம்பர அறிக்கை

(மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்ற நீதி பேராணை W.P.No.33647/2007 மற்றும் Suo Motu W.P.No.32836/2007 உத்தரவுகளின் படி)

<u>அறிக்கை எண் 1/2018</u>

சென்னை போதைப்பொருள் மற்றும் மனநிலை பாதிக்கும் பொருட்களுக்கான முதன்மை சிறப்பு நீதிமன்றத்தில், தமிழ்நாடு அடிப்படை பணி மற்றும் குறிப்பிட்ட பதவிகளுக்கான விதிகளின் (Adhoc Rules) கீழான பதவிகளுக்கு பணி நியமனம் செய்யும் பொருட்டு தகுதீ தேர்வு நடைபெறவுள்ளது. அந்த பதவிகளுக்கு கீழ்க்கண்ட தகுதி உடையவர்களிடமிருந்து உரிய சான்றிதழ்களின் ஜெராக்ஸ் நகல்கள் சுய சான்றொப்பத்துடன் (Self attestation) இணைத்து தபால் மூலம் கீழே குறிப்பிடப்பட்ட உரிய படிவத்துடன் விண்ணப்பங்கள் கோரப்படுகிறது. சான்றிதழ்கள் சரிபார்த்தலின் அடிப்படையில் தகுதி தேர்வுக்கு இந்நீதிமன்ற இணையதள வலைதளத்தின் மூலம் அழைக்கப்படுவோர் மட்டும் நேரில் கலந்து கொள்ளவும்.

| | |
|---|---|
| 1. பதவியின் பெயர் | **ஒளி நகல் எடுப்பவர்(Xerox Operator)** |
| சம்பள ஏற்ற முறை | Level Based Pay Matrix of Rs.16600-52400 (Level -3) |
| கல்வித்தகுதி | குறைந்த பட்ச பொது கல்வி தகுதி அதாவது பள்ளி இறுதி வகுப்பு (பத்தாம் வகுப்பு தேர்ச்சி) அல்லது அதற்கு சமமான கல்வியில் தேர்ச்சி பெற்றிருத்தல் வேண்டும். |
| தொழில்நுட்பத் தகுதி | ஆறு மாதங்களுக்கு குறைவில்லாமல் ஜெராக்ஸ் மெஷினில் நகல் எடுக்கும் அனுபவம் பெற்றிருத்தல் வேண்டும். அதற்கான சான்றிதழ் வைத்திருத்தல் அவசியம். |
| காலிப்பணியிடங்கள் | 2 |
| இன சுழற்சி முறை | 1. பொதுப்போட்டி (முன்னுரிமை பெற்றவர்) General Turn (P) - 1<br>2. ஆதி திராவிடர் (முன்னுரிமை அடிப்படையில் அருந்ததியினா்) (பெண்கள்) (ஆதரவற்ற விதவைகள்) இல்லையென்றால் ஆதி திராவிடர். Scheduled Caste (P) (Arunthathiyar) (W)(DW) (if not available, SC) - 1 |

| | |
|---|---|
| 2. பதவியின் பெயர் | துப்புரவாளர் (Sweeper) |
| சம்பள ஏற்ற முறை | Level Based Pay Matrix of Rs.15700- 50000 (Level -1) |
| கல்வித்தகுதி | தமிழில் எழுத படிக்கத் தெரிந்திருக்க வேண்டும். |
| காலிப்பணியிடங்கள் | 3 |
| இன சுழற்சி முறை | 1. பொதுப்போட்டி (முன்னுரிமை பெற்றவர்)<br>General Turn (P) - 1<br>2. ஆதி திராவிடர் (முன்னுரிமை அடிப்படையில் அருந்ததியினர்) (பெண்கள்) (ஆதரவற்ற விதவைகள்) இல்லையென்றால் ஆதி திராவிடர்<br>Scheduled Caste (P) (Arunthathiyar) (W)(DW) (if not available, SC - 1<br>3. மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர் மரபினர் (முன்னுரிமை பெற்றவர்)<br>Most Backward Classes & Denotified Communities (P) -1 |
| 3. பதவியின் பெயர் | மசால்சி (Masalchi) |
| சம்பள ஏற்ற முறை | Level Based Pay Matrix of Rs.15700- 50000 (Level -1) |
| கல்வித்தகுதி | தமிழில் எழுத படிக்கத் தெரிந்திருக்க வேண்டும். |
| காலிப்பணியிடங்கள் | 2 |
| இன சுழற்சி முறை | 1. ஆதி திராவிடர் (முன்னுரிமை அடிப்படையில் அருந்ததியினர்) (பெண்கள்) (ஆதரவற்ற விதவைகள்) இல்லையென்றால் ஆதி திராவிடர்<br>Scheduled Caste (P) (Arunthathiyar) (W)(DW) (if not available, SC - 1<br>2. மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர் மரபினர் (முன்னுரிமை பெற்றவர்)<br>Most Backward Classes & Denotified Communities (P) -1 |

Note: P-Priority, W-Women, DW-Destitute Widow.

4.9.18

முதன்மை சிறப்பு நீதிபதி,
போதைப்பொருள் மற்றும் மனநிலை பாதிக்கும்
பொருட்களுக்கான முதன்மை சிறப்பு நீதிமன்றம்,
சென்னை.

வயது தகுதி 01.07.2018- யை அடிப்படையாகக் கொண்டு கணக்கிடப்படும்.

| வ.எண் | விண்ணப்பதாரர்களின் இனசுழற்றி வகைகள் | குறைந்தபட்ச வயது | அதிகபட்ச வயது |
|---|---|---|---|
| 1 | ஆதிதிராவிடர், ஆதிதிராவிடர் (அருந்ததியர்), பழங்குடி வகுப்பினர் மற்றும் அனைத்து வகுப்புகளையும் சார்ந்த ஆதரவற்ற விதவைகள் | 18 வயது பூர்த்தி அடைந்தவர்கள் | 35 வயதுக்குள் |
| 2 | மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் சீர்மரபினர், பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் (முஸ்லீம்) | | 32 வயதுக்குள் |
| 3 | ஏனையோர் (அதாவது ஆ.தி, ஆ.தி (அருந்ததியினர்), பட்டியல் வகுப்பினர், மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் / சீர மரபினர், பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் மற்றும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் (முஸ்லீம்) ஆகிய வகுப்பினைச் சாராதவர்கள் | | 30 வயதுக்குள் |

(வயது வரம்பு சலுகைகள் நடைமுறையிலுள்ள அரசு ஆணைகள் அரசு விதிமுறைகளின்படி செயல்படுத்தப்படும்)

**<u>விண்ணப்பிக்க கடைசி நாள்</u>**

விண்ணப்பங்கள் ( ஒரு பாஸ்போர்ட் அளவு புகைப்படம் உரிய இடத்தில் ஒட்டப்பட்டு சுயசான்றொப்பத்துடன்) தற்போது பணிபுரியும் விவரங்களுடனும் (ஏதும் இருப்பின்) அனைத்து கல்விச் சான்றிதழ்கள், சாதிச் சான்றிதழ் மற்றும் முன்னுரிமைக்கான சான்றிதழ்கள் (ஊனமுற்றோர், ஆதரவற்றோர் விதவை மற்றும் கலப்புத் திருமணம் மற்றும் பிற) மற்றும் பிற சான்றிதழ்களின் நகல்கள் உரிய சுய சான்றொப்பத்துடன் கீழ்காணும் முகவரிக்கு ஒப்புதல் அட்டையுடன் கூடிய பதிவுத் தபாலில் 26.09.2018-ம் தேதி மாலை 05.45 மணிக்குள் கிடைக்குமாறு அனுப்ப வேண்டும்.

காலதாமதமாக வரும் விண்ணப்பங்கள் எக்காரணம் கொண்டும் பரிசீலிக்கப்படமாட்டாது.

மேற்கண்ட நியமனத்திற்கு தகுதியான நபர்களை தேர்வு செய்யவோ, நேர்காணலை ஒத்திவைக்கவோ நியமன அறிக்கையை எவ்வித முன்னறிவிப்பும் இன்றி ரத்து செய்யவோ சென்னை போதைப்பொருள் மற்றும் மனநிலை பாதிக்கும் பொருட்களுக்கான முதன்மை சிறப்பு நீதிமன்ற நீதிபதி அவர்களுக்கு முழு அதிகாரம் உள்ளது.

இத்துடன் தெரிவிக்கப்பட்டுள்ள விண்ணப்பதாரர்களுக்கான அறிவுரையை தவறாது படித்து பின்பற்றுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது. சொல்லப்பட்டுள்ள அறிவுரைகளை பின்பற்றப்படாமல் இருக்கும் பட்சத்தில், பெறப்படும் விண்ணப்பங்கள் நிராகரிப்புக்கு உள்ளாக்கப்படும்.

4.9.18

முதன்மை சிறப்பு நீதிபதி,
போதைப்பொருள் மற்றும் மனநிலை பாதிக்கும்
பொருட்களுக்கான முதன்மை சிறப்பு நீதிமன்றம்,
சென்னை.

## விண்ணப்பதாரர்களுக்கான அறிவுரைகள்

1. விண்ணப்பங்கள் வரையறுக்கப்பட்ட படிவத்தில் பூர்த்தி செய்யப்பட்டு (உரிய படிவம் இந்நீதிமன்ற இணையதள வலைதளத்தில் இருந்து பதிவிறக்கம் செய்து கொள்ளலாம்) பதிவுத் தபால் மூலமாக மட்டுமே அனுப்பப்பட வேண்டும்.

2. ஒரு தபால் உறையில் ஒரு விண்ணப்பதாரரால் ஒரு விண்ணப்பம் மட்டுமே அனுப்பப்பட வேண்டும். ஒரே தபால் உறையில் ஒன்றுக்கு மேற்பட்ட விண்ணப்பங்கள் அனுப்பப்படக் கூடாது. விண்ணப்பங்கள் அனுப்பும் தபால் உறையின் மேல் பகுதியில், விண்ணப்பிக்கும் பதவியின் பெயரை தெளிவாக் குறிப்பிடுதல் வேண்டும்.

3. பாஸ்போர்ட் அளவு புகைப்படம் விண்ணப்பத்தில் உரிய இடத்தில் ஒட்டப்பட்டு புகைப்படத்தின் மேல் விண்ணப்பதாரர் கையொப்பம் இடவேண்டும். மேலும் விண்ணப்பத்துடன் அனைத்து சான்றாவணங்களின் நகல்களில் சுயசான்றொப்பம் (By self attestation) செய்யப்பட்டு அனுப்பப்பட வேண்டும். விண்ணப்பதாரர்கள் நேர்முகத் தேர்வின்போது அனைத்து அசல் சான்றிதழ்கள் மற்றும் ஆளறிச்சான்றிதழுடன் கலந்து கொள்ள வேண்டும். எக்காரணம் கொண்டும் அசல் சான்றாவணங்கள் இணைக்கப்படக் கூடாது. உரிய சான்றாவணங்களின் நகல்கள் இணைக்கப்படாத நேர்வுகளில் அந்த விண்ணப்பங்கள் எந்தவித முன்னறிப்புமின்றி நிராகரிக்கப்படும்.

4. முழுமையாக பூர்த்தி செய்யப்படாத விண்ணப்பங்கள் மற்றும் தவறான தகவல்கள் கொண்டுள்ள விண்ணப்பங்கள் முற்றிலும் நிராகரிக்கப்படும்.

5. விண்ணப்பத்தில் விண்ணப்பதாரரால் குறிப்பிடப்பட்டிருக்கும் தகவல்கள் எவையேனும் தவறானவை எனத் தெரிய வரும்பட்சத்தில், அவ்விண்ணப்பதாரரின் விண்ணப்பம் எவ்வித முன்னறிவிப்புமின்றி நிராகரிக்கப்படும்.

6. முன்னுரிமை கோரும் நேர்வுகளில் முன்னுரிமைக்கான உரிய சான்றிதழ்களின் நகல் இணைக்கப்படவேண்டும். தவறும்பட்சத்தில் அவ்விண்ணப்பதாரரின் விண்ணப்பம் முற்றிலும் நிராகரிக்கப்படும்.

7. விண்ணப்பதாரர்கள் விண்ணப்பத்துடன் தங்களது இருப்பிடச் சான்றாக கீழ்க்கண்ட சான்றுகளில் ஏதாவது இரண்டின் நகல்களை இணைத்து அனுப்ப வேண்டும்.

| | |
|---|---|
| 1. ஓட்டுநர் உரிமம் | 4. வாக்காளர் அடையாள அட்டை |
| 2. நிரந்தர கணக்கு எண் அட்டை | 5. குடும்ப அட்டை |
| 3. வங்கி கணக்குப் புத்தகத்தின் முதல் பக்கம் | 6. ஆதார் அட்டை |

அனைத்து தகவல் பரிமாற்றங்களும் (தேர்வு/ நேர்காணலுக்கான அழைப்பு விண்ணப்பம் ஏற்கப்பட்டது அல்லது மறுக்கப்பட்டது) www.districts.ecourts.gov.in/chennai என்ற இணையதள வலைதளத்தில் மட்டும் தகவல்கள் வெளியிடப்படும். வேறு எந்த வகையான முறையிலும் விண்ணப்பதாரருக்கு தனிப்பட்ட முறையில் தகவல்கள் தெரிவிக்கப்படமாட்டாது. எனவே, விண்ணப்பதாரர்கள் மேற்கூறிய இணைதள வலைதளத்தை தொடர்ந்து கவனித்து தகவல்களை அறிந்துகொள்ளுமாறு தெரிவிக்கப்படுகிறது.

<u>விண்ணப்பங்களை அனுப்ப வேண்டிய முகவரி</u>

முதன்மை சிறப்பு நீதிபதி,
போதைப்பொருள் மற்றும் மனநிலை பாதிக்கும்
பொருட்களுக்கான முதன்மை சிறப்பு நீதிமன்றம்,
மாநகர உரிமையியல் நீதிமன்ற கட்டிடம்,
உயர்நீதிமன்ற வளாகம், சென்னை - 104

# மாதிரி விண்ணப்பப் படிவம்

Photo

**விண்ணப்பிக்கும் பதவியின் பெயர் :**

1. பெயர் :
2. தந்தை / கணவர் பெயர் :
3. பிறந்த தேதி மற்றும் வயது :
4. கல்வித் தகுதி :
5. ஜாதி (சான்றிதழ் நகல் இணைக்கவும்) :
6. மதம் :
7. சிறப்புத் தகுதிகள் (ஏதேனும் இருப்பின்) :
8. வீட்டு முகவரி :
9. அரசுபணியில் முன் அனுபவம் :
10. திருமணமானவரா ? ( ஆம் / இல்லை) :
11. கணவர்/ மனைவி வேலையில் உள்ளவராக இருந்தால் அதன் விவரம் :
12. உம்மீது காவல்துறையில் வழக்கு ஏதும் நிலுவையில் இருந்தால் அதன் விவரம் :
13. முன்னுரிமைக்கான சான்றிதழ்கள் :
14. தமிழ் வழி கல்வியில் பயின்றிருந்தால் அதற்குரிய சான்றிதழ்கள் :

**சமர்ப்பிக்கப்படும் சான்றிதழ்களின் நகல்கள் (Xerox Copies)**

**விண்ணப்பதாரர் கையொப்பம்**